16.08.2023
RLT.OP.No. 11/2022

ம.சா.1 சாட்சி அலமேலு இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பழைய எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். நான் அரசாங்க வேலை பார்த்து ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். என்ன வேலை பார்த்தேன் என்றால் RTO வுக்கு PA வாக பணிபுரிந்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன்.

தாவா சொத்து சுயசம்பாத்திய சொத்துதானா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கான கிரைய ஆவணத்தின் அசலையோ, சான்றிட்ட நகலையோ இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரரிடம் கிரைய ஆவணத்தை காண்பித்தேனா என்றால் காண்பிக்கவேண்டிய அவசியம் இல்லை. கிரைய ஆவணத்தின் நகலையாவது எதிர்மனுதாரரிடம் காண்பித்தேனா என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. எதிர்மனுதாரரிடம் இருந்து எவ்வளவு ரூபாய் தற்போது வரை வாடகை பாக்கி உள்ளது என்றால் ரூ.1,00,000/−ற்கு மேல் உள்ளது. மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்திலும், மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

வாடகை ஒப்பந்தத்தை நான்தான் தயார் செய்து எதிர்மனுதாரரிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்தான் தயார் செய்து கொண்டுவந்தார். அதில் நான் கையொப்பமிட்டேன். 2 பத்திரங்கள் கொண்டுவந்தாரா அல்லது ஒரு பத்திரம் கொண்டுவந்தாரா என்றால் ஒரு பத்திரம் கொண்டுவந்தார். இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு

முன்பாகவே எதிர்மனுதாரர் என்மீது அசல் வழக்கு எண். 117/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

மாதவாடகையாக எதிர்மனுதாரர் எனக்கு எவ்வளவு செலுத்தி வந்தார் என்றால் ஒப்பந்தத்தில் உள்ளது போல் மாதம் ரூ.4,700/- வாடகையும், அட்வான்ஸ் தொகையாக ரூ.30,000/- மும் செலுத்தினார். வாடகையை ஒரு வருடம் மட்டும் செலுத்தினார். எதிர்மனுதாரர் அதன் பிறகு ரூ.5,200/- ஆக மாத வாடகை உயர்த்தி கொடுத்தார் என்றால் 6 மாத காலம் வாடகையை தரவில்லை. அதனால் வாடகை பாக்கியை கேட்டபோது வீட்டை காலி செய்வதாக சொன்னார். அதன் பிறகு 2020 ம் வருடம் ஜீலை மாதத்திலிருந்து ரூ.5,200/- வாடகையாக கொடுத்தார். 2022ம் ஆண்டு ஜனவரி முதல் தற்போதுவரை வாடகை தரவில்லை.

எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண். 117/2022 என்ற வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. வாய்மொழியாக கேட்டேன். வாடகை ஒப்பந்தத்தில் யாரும் கையொப்பம் செய்தார்களா என்றால் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. அசல் வாடகை ஒப்பந்தத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் அதற்கான நகலை எதிர்மனுதாரர் என்னிடம் கொடுத்தார் என்றாலும் சரிதான். வாடகை ஒப்பந்தம் தயார் செய்யப்பட்ட தேதி தெரியுமா என்றால் 10.03.2018 தேதி குடி வந்தார். 23.05.2018ம் தேதி வாடகை ஒப்பந்தம் தயார் செய்து கொண்டுவந்தார்.

அசல் ஆவணத்தை எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டு நகலை மட்டும் நான் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு எதிர்மனுதாரர் மீது நம்பிக்கை வைத்திருந்தேனா என்றால் தனது மகள் மருத்துவ படிப்பு கொண்டிருப்பதாகவும் கூறினார். அதன் அடிப்படையில் அவர்மீது

நம்பிக்கை வைத்து அசலை பெற்றுக்கொள்ளவில்லை. பொதுவாக வாடகை ஒப்பந்தத்தில் நகலை வைத்து வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் மின்கட்டணத்தையும், வீட்டுவரியையும், குப்பை வரியையும் சரியாக செலுத்தி வருகிறாரா என்றால் மின்கட்டணத்தை மட்டும் செலுத்தி வருகிறார். மற்ற வரிகளை நான்தான் செலுத்தி வருகிறேன். குப்பைவரி செலுத்தியதற்கு என்னிடம் ரசீது கொடுத்தார்களா என்றாலும் அந்த ரசீதை நீதிமன்றத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

எதிர்மனுதார் அசல் வழக்கு எண். 117/2022 என்ற வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் எதிர்மனுதாரர் மீது திருநகர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் எதிர்மனுதாரர் என்னை மிரட்டினார். அதற்காக புகார் கொடுத்தேன். அந்த புகார் மனுவை அந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்த பிறகு 4 அகலம் கொண்ட பாதையில் 2 அடி அளவிற்கு பள்ளம் தோண்டி வாழை கன்று நட்டு வைத்துள்ளேன் என்றால் அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இருந்து மரங்கள் உள்ளன. எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் பிள்ளைகளும் மேற்படி பள்ளத்தில் விழுந்து அது சம்பந்தமாக என்னிடம் முறையிட்டார்கள் என்றாலும் அதனை நான் கண்டுகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரரிடம் குறைந்த வட்டிக்கு பணம் எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. எதிர்மனுதாரரிடம் நான் கிரைய ஒப்பந்தம் எதுவும் போட்டு கொண்டேனா என்றால் இல்லை. நடராஜன் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்

தங்கையின் கணவர் ஆவார். எனது தூண்டுதலின் பெயரில் நடராஜனும் வேறு சிலரும் எதிர்மனுதாரரை மிரட்டினார்கள் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 8 வழக்கறிஞர் அறிவிப்பானது எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண். 117/2022 என்ற வழக்கை தாக்கல் செய்த பிறகு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பா அல்லது அதற்கு முன்பாக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பா என்றால் எனக்க ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 10 புகார் மனு எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண். 117/2022 என்ற வழக்கு தாக்கல் செய்த பிறகு கொடுக்கப்பட்டதா அல்லது அதற்கு முன்பாக கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

நான் இரண்டு அசல் வாடகை ஒப்பந்தங்களை தயார் செய்து ஒரு ஒப்பந்தத்தை என்னிடம் வைத்துகொண்டு ஒரு ஒப்பந்தத்தை எதிர்மனுதாரரிடம் கொடுத்தேன் என்றாலும் நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. வாடகை ஒப்பந்தத்தில் இரண்டு சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றாலும் வழக்கிற்காக சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அதற்காகவும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் ஏற்கனவே அசல் வழக்கு எண். 117/2022 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அந்த வழக்கில் எனக்கு எதிராக தீர்ப்பு வந்துவிடும் என்பதால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரையும் எதிர்மனுதாரர் குடும்பத்தையும் அச்சுறுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.